RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 196 | ஜூலை.22 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழக பட்ஜெட் ஆகஸ்ட் 5ல் தாக்கல்: சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவிப்பு

சென்னை: ஜூலை.22-

2026-27ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5 ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும் என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "202627 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும். மேலும், ஆகஸ்ட் 6 ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அலுவல் ஆய்வுக் கூட்டம் நடக்கும். அதில் பட்ஜெட் மீதான விவாதத்தை எத்தனை நாள் நடந்துவது என்பது உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்படும்.

சட்டப்பேரவை நடவடிக்கைகள் முழு நேரலை செய்யப்படும். சட்டப்பேரவையில் முன்னர் கடைப்பிடித்து வந்த நடவடிக்கைகள்தான் தற்போதும் தொடரும். வாக்களித்த மற்றும் வாக்களிக்காத பெருமக்களும் வியந்து போற்றி பாராட்டுகின்ற அளவுக்கு இந்த நிதிநிலை இருக்கும் என்று நம்புகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் முழு விவாதத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை சொல்ல அனைத்து உரிமையும் இருக்கிறது;



அதேபோல மாற்றுக் கருத்துக்கள் சொல்லப்படும் போது அமைதியாக இருந்து அதைக் கேட்டு விவாதித்து, பின்னர் பதில் சொல்ல வேண்டும். இந்த முறையும் சட்டப்பேரவை அமைதியாக நடைபெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

சட்டப்பேரவை உறுப்பினர் மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டிருக்கும் செய்திக்குறிப்பு எங்களுக்கு வந்துள்ளது. பேரவைத் தலைவரை கேட்டுவிட்டுதான், சட்டப்பேரவை உறுப்பினரை கைது செய்ய வேண்டும் என்கிற விதி இல்லை. சட்டப்பேரவைக்குள் வைத்து கைது செய்யவே சபாநாயகர் அனுமதி தேவை.

பேரவைத் தலைவர் முன் அனுமதியின்றி எவரையும் பேரவை அமைப்பு எல்லைக்குள் கைது செய்யக்கூடாது: வெளியே நடைபெறும் சம்பவங்களில் கைது செய்ய பேரவைத் தலைவரின் அனுமதி தேவையில்லை. 24 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், நான் முறையாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். மார்க்கண்டேயன் கைது குறித்து தகவல் தெரிவிக்கப்படும்'' என்றார்.

"சட்டப்பேரவையில் உள்ள உறுப்பினர்கள் பேரவைக்குள் சைகைகள் காட்டுவது விதிகளுக்கு முரணானது என கூறப்படுகிறது'' என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, "முதல்வர் விஜய் அன்று பேரவையில் சைகை காட்டியதில் எந்த தவறும் இல்லை; விதிக்கு உட்பட்டுதான் அது நடந்தது'' என்றார். .

அப்படியென்றால் எதிர்க்கட்சிகள் அனுமதி கேட்டாலும் அளிப்பீர்களா? என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "என்ன சைகை செய்யப்போகிறார் என எனக்கு தெரிந்தால், அனுமதி அளிப்பதா, வேண்டாமா என முடிவெடுப்பேன். முதல்வர் விஜய் என்ன சைகை அளிக்கப்போகிறார் என்பதை புரிந்து கொண்டு நான் அனுமதி அளித்தேன்'' இவ்வாறு அவர் பதிலளித்தார்

தமிழகத்தில் தவெக அரசு அமைந்த பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் என்பதால், தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் பல இதில் நிறைவேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக, மகளிர் உரிமைத் தொகை ரூ. 2,500 ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு வருமா என்று பெண்கள் ஆர்வத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும், இந்த முதல் பட்ஜெட் மக்களின் எதிர்பார்ப்புகளை எந்தளவுக்குப் பூர்த்தி செய்யும் என்பது சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகே தெளிவாகும்.



## உயிரிஎரிவாயு ஆலையில் முதல்வர் விஜய் ஆய்வு

சென்னை: ஜூலை.22-

சேத்துப்பட்டில் செயல்பட்டு வரும் உயிரிஎரிவாயு ஆலையைத் முதல்வர் விஜய் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சென்னை சேத்துப்பட்டு பகுதியில் பொதுதனியார் பங்களிப்புடன் செயல்பட்டு வரும் உயிரிஎரிவாயு ஆலையைத் முதல்வர் விஜய் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னையில் நாள்தோறும் சேரும் குப்பைகளில் 3,200 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளாகவும், 2,950 மெட்ரிக் டன் மக்காத குப்பைகளாகவும் உள்ளன. இதில் மக்கும் குப்பைகளை நவீன தொழில்நுட்பத்தில் இயற்கை எரிவாயுவாகவும், உராகவும் மாற்ற வேண்டும்.

பிளாஸ்டிக் உள்ளிட்ட மக்காத குப்பைகளைத் தார்ச்சாலை அமைக்கவும், சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாகவும் அனுப்ப வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டார்.

சேத்துப்பட்டு ஆலை தினசரி 140 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளைச் செயலாக்கி, 4,900 கிலோ எரிவாயுவை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இதேபோல் மாதவரத்திலும் ஓர் ஆலை இயங்கி வருகிறது. மாநகரின் உள்கட்டமைப்பை வலுப்படுத்த மேலும் ஐந்து ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

இப்பணிகளைச் சென்னை மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அறிவியல் பூர்வமாகச் செயல்படுத்த முதல்வர் விஜய் உத்தரவிட்டார்.

## பெரம்பூர் தேர்தல் வெற்றிக்கு எதிரான வழக்கு:

# முதல்வர் விஜய்க்கு நோட்டீஸ் அனுப்ப ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூலை.22-

பெரம்பூர் தொகுதி தேர்தல் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்கில், தமிழக முதல்வர் விஜய்க்கு புதிதாக நோட்டீஸ் அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்ட தவெக தலைவர் விஜய் 53,715 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். முதல்வர் விஜய் 1,20,365 வாக்குகளைப் பெற்றிருந்தார். அவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் 66,650 வாக்கு பெற்றிருந்தார்.

பெரம்பூர் தொகுதியில் தமிழக முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் மற்றும் தொகுதி வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.



திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்கில், "வேட்பு மனுவில் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கி இருப்பதாகவும். சொத்துக்கள் விவரங்கள் மற்றும் வழக்குகள் விவரங்கள் முறையாக தெரிவிக்கவில்லை என்பதால் விஜய்யின் வெற்றி செல்லாது என அறிவிக்க வேண்டும்,'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ள தமிழக முதல்வர் விஜய், தேர்தல் அதிகாரிக்கு நோட்டீஸ் சென்றடையவில்லை என, ஆர்.டி.சேகர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் தெரிவித்தார்.

இதையடுத்து, முதல்வர் விஜய், தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருக்கு புதிதாக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளிவைத்தார்.

# நீட் வினாத்தாள் கசிவு முதல் புதிய மசோதாக்கள் வரை பிரதமர் மோடி கூறியது என்ன?

புதுடெல்லி, ஜூலை.22-

நீட் வினாத்தாள் கசிவில் ஈடுபட்டவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார். மேலும், இதுபோன்ற வினாத்தாள் கசிவுகளை தடுப்பது தேசிய பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரை முன்னிட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் மங்கள் மிலன் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது. தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்பிக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, நீட் வினாத்தாள் கசிவு குறித்தும், அதை தடுப்பதற்கான வழிகள் குறித்தும் விளக்கி உள்ளார்.

கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதை, மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர்களுக்கு விளக்கினார். கிரண் ரிஜிஜு கூறியது: "என்டிஏ நாடாளுமன்றக் கட்சி தனது மங்கள மிலன் கூட்டத்தை நடத்தியது.



இதில், அனைவரும் கலந்துகொண்டனர். அனைத்து உறுப்பினர்களுக்கும் வழிகாட்டும் வகையில் பிரதமர் மோடி உரையாற்றினார்

கடந்த சில மாதங்களில் இந்தியா சாதித்த சாதனைகள் குறித்து பிரதமர் மோடி முதலில் பேசினார். பல நாடுகளுடன் கையெழுத்திடப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்தும் அவர் விளக்கினார்.

நீட் வினாத்தாள் கசிவு குறித்தும் பிரதமர் மோடி பேசினார். நீட் வினாத்தாள் கசிவுக்குப் பொறுப்பானவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், இதுபோன்ற வினாத்தாள் கசிவு மீண்டும் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதுபோன்ற வினாத்தாள் கசிவுகளைத் தடுப்பது ஒரு தேசிய பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். குறைபாடற்ற தேர்வு முறையை உருவாக்க கூட்டு முயற்சி தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் வினாத்தாள் கசிவுகள் தடுக்கப்படும் என்பதற்கான முழு உத்தரவாதத்தை நாட்டின் இளைஞர்களுக்கு அளிப்பதோடு, இந்திய இளைஞர்கள் உலகில் தலைமைப் பாத்திரத்தை வகிக்கக்கூடிய வழிகளும் அவர்களுக்கு காட்டப்படும் என உறுதி அளித்தார்.

நீட் தேர்வு விவகாரத்தில் வினாத்தாள் கசிவு குறித்த தகவல் வெளிவந்த உடனேயே அரசு உடனடி நடவடிக்கைகளை எடுத்ததாக பிரதமர் கூறினார். 13 பேர் கைது செய்யப்பட்டதையும், மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருப்பதை உறதிப்படுத்த, நீட் மறு தேர்வு நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். முடிவுகள் அறிவிப்பதிலும் கால தாமதம் இன்றி செயல்பட்டதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் மசோதாக்கள் நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்துவதில் என்டிஏ கூட்டணி ஒற்றுமையாக இருக்கும் என்று தெரிவித்த பிரதமர் மோடி, மசோதாக்களை நிறைவேற்றுவதில் எதிர்க்கட்சி சகாக்களும் இதில் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அரசியல் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் என்றும், ஆனால் நாடாளுமன்றம் நாட்டுக்காகவும், அதன் எதிர்காலத்துக்காகவும், இளைஞர்களுக்காகவும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த நோக்கத்துக்காகவே நாம் அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறோம் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்'' என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறினார்.

# சென்னையில் இரண்டு இடங்களில் அமலாக்கத்துறை 'திடீர்' சோதனை

சென்னை, ஜூலை.22-

திருவொற்றியூர், தேனாம்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் முக்கிய நபர்களில் வீடுகளில் இன்று காலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.




சென்னையில் தேனாம் பேட்டை, திருவொற்றியூர் ஆகிய இரண்டு பகுதிகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் காலை முதல் சிஆர்பிஎப் போலீசார் உதவியுடன் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக திருவெற்றியூர் பகுதியில் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்யும் முருகேசன் என்பவர் வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் காலை முதலே சோதனையில் ஈடுபட்டு உள்ளனர்.

அதே போன்று, சென்னை தேனாம் பேட்டை பகுதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற வட்டார போக்குவரத்து அலுவலர் தரணிதரன் என்பவர் வீட்டிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சென்னையில் மேலும் ஒரு சில இடங்களில் சோதனை நடைபெறுவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதன் அடிப்படையில் இந்த திடீர் சோதனை நடத்தப்படுகிறது என்பது குறித்தான முழுமையான விவரங்களை இன்னும் வெளியாகவில்லை. இருப்பினும் முதல் கட்டமாக சட்ட விரோத பணப் பரிமாற்றம் செய்யப்பட்டதாக எழுந்த புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக அமலாக்கத் துறை அதிகாரிகள் தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

சோதனையின் முடிவில் எந்த வழக்கில் சோதனை மேற்கொள்ளப்பட்டது, என்னென்ன ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன, பணம் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா உள்ளிட்டவை குறித்த முழுமையான விவரங்கள் தெரிய வரும் என அமலாக்கத் துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக சென்னை உள்ளிட்ட சில இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் தொடர்ச்சியாக சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்குகள் தொடர்பாக சோதனை நடத்தி வரும் நிலையில், இன்று காலை முதல் சென்னையில் இரு இடங்களில் சோதனை நடத்தி வருவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# உடல் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, ஜூலை.22-

திருச்சியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில், நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனையின்படி, திருவெறும்பூர் தாலுகா துவாக்குடி அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்சி மாவட்டத் தலைவர் சரவணன், மாவட்ட இளைஞரணி தலைவர் பாலா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவமனை SCTC ஆலோசகர் கவிதா தேவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உடல் உறுப்பு தானத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



நிகழ்ச்சியில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி, ஆனந்தராஜ், மாநில மகளிரணி தலைவர் காந்திமதி, செயலாளர் ராஜேஸ்வரி, துணைத் தலைவர் ஜெயராணி, துணை ஆலோசகர் ஈஸ்வரி, மாநில துணை ஒருங்கிணைப்பாளர் ராமன், மாநில மகளிரணி ஒருங்கிணைப்பாளர் ரேவதி, மாவட்ட பொருளாளர் கிறிஸ்டி, மாவட்ட மகளிரணி ஆலோசகர் செல்வி உள்ளிட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# நீலகிரி மாவட்டம் தேவாலாவில் இலவச கண் சிகிச்சை முகாமில் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

நீலகிரி, ஜூலை.22-

நீலகிரி மாவட்டம் தேவாலா குளோபல் பள்ளியில் நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், தேவாலா நகர அரசு நகர ஆரம்ப சுகாதார நிலையம், ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் ஆல் தி சில்ரன் ஆகியவை இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். பள்ளி தாளாளர் அனீஷ், பள்ளி நிர்வாக அலுவலர் விக்னேஷ்வரன், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஸ்டீபன்சன், ஆல் தி சில்ரன் மாவட்ட



ஒருங்கிணைப்பாளர் அஜித் மற்றும் சமூக ஆர்வலர் சாரதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் திட்ட மேலாளர் மருத்துவர் விஜேஷ்வரி தலைமையில், முதுநிலை கண் மருத்துவர்கள் டாக்டர் தாவா, டாக்டர் திலீப், டாக்டர் ஜெப்ரின் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் பொதுமக்களுக்கு கண்புரை, கண் அழுத்த நோய் (Glaucoma), சர்க்கரை நோயால் ஏற்படும் விழித்திரை பாதிப்புகள், கண் சதை வளர்ச்சி, பார்வைக் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு கண் நோய்களுக்கு பரிசோதனை செய்தனர்.

தேவாலா நகர அரசு நகர ஆரம்ப சுகாதார நிலையத்தின் ஆஷா பணியாளர்கள் பொதுமக்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் இரத்த சர்க்கரை அளவு பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

இந்த முகாமில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். பரிசோதனையில் 25 பேருக்கு கண்புரை மற்றும் 5 பேருக்கு கண் சதை வளர்ச்சி உள்ளிட்ட பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களுக்கு மேல் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

70கும் மேற்பட்டோருக்கு இலவச கண் கண்ணாடி வழங்குவதற்கான பரிந்துரைகளும் செய்யப்பட்டன.

முகாமில் தன்னார்வலர்கள் உற்சாகமாக பங்கேற்று பதிவு, வழிகாட்டுதல் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி முகாம் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தனர். இம்முகாம் மூலம் தேவாலா மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பயனடைந்தனர்.

# ஊத்துக்கோட்டை வட்டார நாடார் சங்க நுழைவுவாயில் இரு கோஷ்டினரும் பூட்டு போட்டு பூட்டினார்கள்

திருவள்ளூர், ஜூலை.22-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டார நாடார் சங்கத்தில் இரு கோஷ்டியினருக்கு சங்கத்தை யார் கைப்பற்றுவது என்ற கோஷ்டி மோதல் இருதினங்களாக நிலவி வந்த நிலையில் இருதரப்பினருக்கும் பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு எட்டப்படாததால் தற்காலிகமாக காமராஜர் திருமண மண்டப நுழைவுவாயிலை சங்க தலைவர் பரமசிவம் தரப்பினரும் செயலாளர் பதவி நீக்கப்பட்ட தங்ககுமார் தரப்பினரும் போலீசார் முன்னிலையில் சுமூக தீர்வு எட்டும்வரை இருபூட்டுகளைக்கொண்டு பூட்டினார்கள்.



# தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்வைத்திநாதன், நேரில் ஆய்வு

போடிநாயக்கனூர் ஜூலை.22-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்தஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், கோடாங்கிப்பட்டி ஊராட்சி சடயால்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.10.66 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடம் சீரமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, உப்புக்கோட்டை ஊராட்சி பாலார்பட்டி அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளியில் ரூ.72.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டுப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை பார்வையிட்டு, பள்ளி வளாக சுற்றுச்சுவரில் கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஓவியங்களை வரைந்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, நாகலாபுரம் ஊராட்சியில் ரூ.19.76 இலட்சம் மதிப்பீட்டில்30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டதுடன், கட்டுமானப் பணியின் விவரம் குறித்து கேட்டறிந்தார். பின்னர் அப்பகுதியில் உள்ள மக்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன், போதிய அளவு குடிநீர் வழங்குதல் மற்றும் போதிய அளவு தெருவிளக்குகள் செயல்படுவதை உறுதி செய்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், மணியம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.11.60 இலட்சம் மதிப்பீட்டில் நாற்றங்கால் பண்ணை அமைத்து பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு, கொடிக்காய் மரம், புளியமரம், மாமரம் மற்றும் பூவகை மரங்கள் உள்ளிட்ட பலன் தரக்கூடிய மரக்கன்றுகளை அதிக அளவு நடவு செய்து பராமரித்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், அம்மாபட்டி ஊராட்சி, விசுவாசபுரத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கனவு இல்லம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து அப்பகுதி மக்களை சந்தித்து அடிப்படைத் தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன், அப்பகுதி மக்கள் தெருவிளக்குகள் அமைத்துத்தர கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து, உடனடியாக தெருவிளக்குகள் அமைத்துத்தர சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மக்கத்தம்மாள், சோனா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், தலைமையில்

# மாவட்ட காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்

தேனி, ஜூலை.22-

தேனி மாவட்டம் முக்கிய பகுதிகளில் தீவிர நடை ரோந்து (Foot Patrol) பணியில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், குற்றச் செயல்களைத் தடுத்தல், சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# புழல் கெங்காதரன் தெருவில் சமூக கூடல் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.22-

மாதவரம் தொகுதி புழல் கெங்காதரன் தெருவில் அமைந்துள்ள லைன்ஸ் கிளப் அலுவலகத்தில் சமூக கூடல் நிகழ்ச்சி வழக்கறிஞர் சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது.சமூக சேவகர் சடையாண்டி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு



சிறப்பு அழைப்பாளராக 24வது மேற்கு வட்டக் கழக செயலாளர் புழல் லைன் டாக்டர் எஸ்.விஜயன் கலந்துகொண்டு இந்த லைன்ஸ் கிளப் கட்டிடத்தில் பள்ளி மாணவமாணவிகளுக்கு இலவச கணினி பயிற்சி மையம் அமைப்பது குறித்தும் மற்றும் கணினியின் முக்கியத்துவம் குறித்தும் உள்ளிட்ட பல்வேறு கல்வி சம்பந்தப்பட்ட கருத்துக்களை விளக்கி கூறி சிறப்புரையாற்றினர். இதில் சமூக ஆர்வலர்கள் செல்வராஜ், எழிலரசு, ராஜாமணி, பௌத்தர், ஜானகிராமன், தமிழ், கெங்காதரன், ஏசுதாஸ், வசந்தகுமார், விஜய்பாபு, நாகவீரன், ஹரிகரன் உள்ளிட்ட லைன்ஸ் கிளப் பொறுப்பாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முடிவில் ரவீந்திரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மாட்டிறைச்சி கடைகள் மீது ஆய்வு நடத்தக் கோரி இந்து அமைப்புகள் சார்பில் தாம்பரம் நகராட்சி ஆணையாளரிடம் மனு

தாம்பரம் ஜூலை.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், அனகாபுத்தூர், பொழிச்சலூர், திருநீர்மலை உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் மாட்டிறைச்சி கடைகள் சட்ட விதிமுறைகளை பின்பற்றுகிறதா என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கக் கோரி இந்து அமைப்புகள் சார்பில் மாநகராட்சி ஆணையரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.



இந்த மனுவை இந்து பாரத முன்னணி மாநிலத் தலைவர் அனகை ஏ.செல்வம், ஜெய் சிவசேனா மாநிலத் தலைவர் எஸ்.எஸ்.செந்தில், இந்து சேவா சங்கம் மாநிலத் தலைவர் ஆவடி ஸ்டாலின், இந்து பாரதம் முன்னணி அமைப்பாளர் குரோம்பேட்டை எஸ்.குமார், மற்றும் மாநில இளைஞரணி செயலாளர் எஸ்.எம்.கோபி ஆகியோர் இணைந்து வழங்கினர்.

மனுவில், தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குள் இயங்கி வரும் சில மாட்டிறைச்சி கடைகளில் விற்கப்படும் இறைச்சி, சட்டப்படி அனுமதி பெற்று அறுக்கப்பட்டதா என்ற சந்தேகம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாநகராட்சி ஆணையரிடம் மனு அளித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த இந்து பாரத முன்னணி மாநிலத் தலைவர் அனகை கி. செல்வம், தமிழ்நாடு விலங்குகள் பாதுகாப்புச் சட்டம், 1958ன் விதிகளின்படி பசுக்கள் மற்றும் கன்றுகளை அறுப்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் இருப்பதாக தெரிவித்தார்.

குறிப்பாக, 10 வயதுக்கு மேற்பட்டதும், இனப்பெருக்கம், பால் உற்பத்தி அல்லது விவசாயப் பணிகளுக்கு பயன்படாதது என கால்நடை மருத்துவ அதிகாரியின் சான்றிதழ் பெற்ற பின்னரே அறுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எனவே, தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் மாட்டிறைச்சி கடைகள் அனைத்திலும் அதிகாரிகள் விரிவான ஆய்வு மேற்கொண்டு, சட்ட விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், இந்த கோரிக்கையின் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், அடுத்த கட்ட போராட்டம் மற்றும் முடிவுகள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் அனகை ஏ.செல்வம் தெரிவித்தார்.

இந்த மனு தற்போது தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கை குறித்து பொதுமக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## ஆட்சி மாற்றம் வந்த போதும் காட்சி மாறவில்லை என

# பல ஆண்டுகளாக தடைப்பட்டு கிடக்கும் காவேரி கூட்டு குடிநீரை விநியோகம் செய்திட வேண்டுமென திருத்தேர்வளை கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளனர்

இராமநாதபுரம் ஜூலை.22-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா திருத்தேர்வளை ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் பல ஆண்டுகளாக காவேரி கூட்டு குடிநீர் திட்டம் தடைப்பட்டு கிடப்பதால் விவசாயத்தை நம்பி வாழும் கிராம மக்கள் தங்களின் குடிநீர் தேவைக்கு குடம் ஒன்றிற்கு 12 ரூபாய் காசு கொடுத்து தண்ணீர் வாங்குவதாகவும் கடந்த சில மாதங்களாக திருத்தேர்வளை ஆதி திராவிடர் குடியிருப்பு, இந்திரா நகர்,கணக்கனேந்தல், உள்ளிட்ட கிராம பகுதியில் அன்றாட பயன்பாட்டிற்கு குழாய் நீர் விநியோகம் சீராக கிடைக்காமல் இதர தேவைகளுக்கும் தண்ணீர் காசு கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டு உள்ளது இது குறித்து ஊராட்சி செயலாளர் முதல் வட்டார




வளர்ச்சி அலுவலர் வரை பல முறை கூறியும் எந்த பயனும் இல்லாததால் பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பணிக்கு செல்வோர் மிகுந்த சிரமம் அடைந்து வருவது தொடர் கதையாக உள்ளது அதுமட்டுமின்றி விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் கிராம மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருவதால் திருத்தேர்வளை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தடைப்பட்டு கிடக்கும் காவேரி கூட்டு குடிநீர் விநியோகம் மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கு குழாய் நீர் சீராக விநியோகம் செய்திட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் திருத்தேர்வளை கிராம மக்கள் மனு அளித்தனர்.

இது குறித்து கிராம மக்கள் கூறியதாவது திருத்தேர்வளை ஊராட்சி மாவட்டத்தில் அடிப்படை வசதிகளில் மிகவும் பின் தங்கிய ஊராட்சியாக உள்ளது இங்கு மக்களுக்கு தேவையான சாலைவசதி ,குடிநீர் ,தெருவிளக்கு,கிராம நிர்வாக அலுவலகம்,அங்கன்வாடி மையம்,ரேசன் கடை, சீரான மின் விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றுவரை எங்களது ஊராட்சிக்கு உட்பட்ட கிராம மக்களுக்கு எட்டா கனியாக இருந்து வருகிறது இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை கூறியும் எந்த பயனும் இல்லாததால் பல்வேறு சிரமங்களை நாள்தோறும் அடைந்து வருகின்றோம் அவற்றில் ஒன்றான குடிநீர் விநியோகம் இன்றி பல ஆண்டுகளாகவும் அன்றாட பயன்பாட்டிற்கு குழாய் நீர் இன்றி பல மாதங்களாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சிரமம் அடைந்து வருவது மட்டுமின்றி குடம் ஒன்றிற்கு 12 ரூபாய் காசு கொடுத்து தண்ணீர் வாங்கி குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கு பயன்படுத்தி வருகிறோம் எனவே குடிநீர் வசதி வேண்டி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மனு அளித்துள்ளோம் மாவட்ட ஆட்சியர் போர்க்கால அடிப்படையில் தடைப்பட்டு கிடக்கும் காவேரி கூட்டு குடிநீர் விநியோகம் மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கு குழாய் நீர் விநியோகம் சீராக கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.




# டெல்லியில் தேசிய அளவிலான கராத்தே போட்டிஆவடி மாணவர்கள் சாதனை

மாதவரம், ஜுலை.22-

டெல்லியில் கேள் கராத்தே அமைப்பு சார்பில் தேசிய அளவிலான கராத்தே போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ்நாடு, டெல்லி, தெலுங்கானா, பஞ்சாப், மத்திய பிரதேஷ் உள்ளி பல்வேறு மாநிலத் திலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட கராத்தே வீரர்கள் கலந்துகொண்டனர்.அதில் தமிழ்நாடு திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இருந்து மாஸ்டர் டாக்டர் ராஜா, டாக்டர் மாஸ்டர் சங்கீதா, மாஸ்டர் ஆகியோர் தலைமையில் இப்போட்டியில் கராத்தே பயின்ற வீரர்கள் கட்டா மற்றும் குமிதே பிரிவுகளில் கலந்துகொண்டு தனது தனி திறமைகளை வெளிப்படுத்தி சாதனை படைத்தனர். அதில் 3 தங்கப்பதக்கம், 7 வெள்ளி பதக்கம், 3 வெங்கல பதக்கம் பெற்றனர். இதனைத்தொடர்ந்து சென்னை திரும்பிய சாதனை படைத்த கராத்தே வீரர்களுக்கு சக மாஸ்டர்கள், பெற்றோர்கள் இனிப்புகளை வழங்கி வெகுவாக பாராட்டி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.







# இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் சென்னை செங்குன்றம் கிளை சார்பில் மருத்துவர் தினம்

மாதவரம், ஜுலை.22-

இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் சென்னை செங்குன்றம் கிளை சார்பில் மருத்துவர் தின விழா சென்னை கோயம்பேடு ஜெபி.ஹோட்டலில் சென்னை செங்குன்றம் கிளைத் தலைவர் டாக்டர் கோபால் துரைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் டாக்டர் கமல்ராஜ், நிதித்துறை செயலாளர் டாக்டர் லாவண்யா, உறுப்பினர் டாக்டர் லியோ ஜீவாஸ், டாக்டர் ஆறுமுகசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் சிறப்பு அழைப்பாளராக பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.எஸ். ரவி கலந்து கொண்டு மருத்துவர் லியோ ஜீவாஸ், ஸ்ரீவெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி முதல்வர் சபீதா, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை முதல்வர் பிரியா பசுபதி, சேதுராமன், அர்னால்ட், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ரங்கராஜன், தமிழ்நாடு பார் கவுன்சில் மாநிலத் தலைவர் பி.எஸ். அமல்ராஜ் ஆகியோருக்கு மருத்துவர் தின விருதை வழங்கி கௌரவித்தார். இதனைத்தொடர்ந்து பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.எஸ். ரவிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் கென்னிராபர்ட், ராஜேஷ்கர், ஜி.லோகநாதன் ஆகியோர் மருத்துவர் தின உரையாற்றினர்.இதில் சென்னை செங்குன்றம் கிளை இணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.சுகபிரகாஷ், மருத்துவர்கள் சிற்றம்பலம் உள்ளிட்ட மருத்துவர்கள் குடும்பத்தோடு கலந்துகொண்டனர். குழந்தைகளின் பரத நாட்டியம், ஆடல் பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# குன்னூர் நகராட்சி அனைத்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

குன்னூர். ஜுலை.22-

குன்னூர் நகராட்சியில் பொறியாளர் பிரிவில் குடிநீர் வழங்கும் பிட்டராக பணியாற்றி வரும் சார்லஸ் இவர் குன்னூர் நகரப் பகுதியில் பல்வேறு இடங்களில் குடிநீர் வழங்கும் பிட்டராக பணியாற்றி வருகிறார். நகராட்சியில் இவர் சீனியர் பிட்டராக பணியாற்றி வருகிறார். பதினெட்டாம் தேதி அன்று பழைய ஆஸ்பத்திரி லைன் பகுதியில் வசித்து வரும் ஹரி என்பவர் தனது வீட்டுக்கு தண்ணீர் வரவில்லை என்று சார்லஸ் வீட்டிற்கு இரவு 11 மணி அளவில் சென்று கதவைத் தட்டி தகாத வார்த்தைகள் கூறி அவரை தாக்கியுள்ளார். இதில்



பலத்த காயம் அடைந்த சார்லஸ் குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பெற்று வருகிறார் குன்னூர் காவல் நிலையத்தில் ஹரி மீது புகார் அளித்த தின் பேரில் ஹரி மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்யவில்லை என்று குன்னூர் நகராட்சி அனைத்து ஊழியர்கள் சங்கத்தின் சார்பிலும் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் சார்பிலும். அரசு ஊழியர்கள் சார்பிலும் குன்னூர் நகராட்சி அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நகராட்சி குடிநீர் வழங்கும் ஊழியர் சார்லஸை தாக்கிய ஹரியை உடனடியாக கைது செய்ய வேண்டும் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பி அனைத்து ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆண்களின் ரகசிய உடல்நல பிரச்சனைகளுக்கு நவீன தீர்வு : மதுரை அப்போலோவில் அதிநவீன ஆண்ட்ரோலஜி கிளினிக் அறிமுகம்

மதுரை, ஜுலை.22-

ஆண்மையியல் (Andrology) தொடர்பான பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளுக்கு உலகத் தரத்திலான நவீன சிகிச்சைகளை வழங்கும் வகையில், மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனையில் அதிநவீன ஆண்ட்ரோலஜி கிளினிக் தொடங்கப்பட்டுள்ளது.

மதுரை அப்போலோ மருத்துவமனையின் சிறுநீரகவியல் (Urology) மற்றும் ஆண்ட்ரோலஜி துறையில், நவீன நோய் கண்டறிதல் வசதிகள், ரோபோடிக் அறுவை சிகிச்சை, மைக்ரோசர்ஜிக்கல், லேசர் மற்றும் எண்டோஸ்கோபிக் சிகிச்சை முறைகள் மூலம் சிக்கலான சிறுநீரக மற்றும் ஆண்மையியல் நோய்களுக்கு உலகத் தரத்தில் சிகிச்சை



அளிக்கப்படுகிறது. இந்த நவீன சிகிச்சை முறைகள் மூலம் அதிக துல்லியம், குறைந்த பாதிப்பு மற்றும் விரைவான குணமடைதல் உறுதி செய்யப்படுவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ஆண்ட்ரோலஜி கிளினிக்கில் ஆண்களின் மலட்டுத்தன்மை, விந்தணு குறைபாடு, விறைப்புத்தன்மை கோளாறு (Erectile Dysfunction), முன்கூட்டியே விந்து வெளியேறுதல், வரிக்கோசீல் (Varicocele), பெயிரோனி நோய் (Peyronie's Disease), ஆண் ஹார்மோன் குறைபாடுகள், அசோஸ்பெர்மியா (Azoospermia), குழந்தையின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு முழுமையான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் பாலியல் மற்றும் மனநல ஆலோசனை, திருமணத்திற்கு முந்தைய ஆண் கருவுறுதல் பரிசோதனை, ஹார்மோன் மற்றும் விந்தணு பரிசோதனைகள், கருவுறுதல் ஆலோசனை, TESA, PESA, TESE உள்ளிட்ட மேம்பட்ட விந்தணு சேகரிப்பு மற்றும் சிகிச்சை முறைகளும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து மதுரை அப்போலோ மருத்துவமனையின் சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் ஆண்மையியல் நிபுணர் டாக்டர் ஆர். விஷ்ணுராஜா கூறுகையில், "லேசர், மைக்ரோசர்ஜிக்கல் மற்றும் ரோபோடிக் உதவியுடன் கூடிய குறைந்த பாதிப்பு சிகிச்சை முறைகள் மூலம் விறைப்புத்தன்மை கோளாறு முதல் பிறவிக் குறைபாடுகள் வரை பல்வேறு ஆண்மையியல் பிரச்சனைகளுக்கு நவீன சிகிச்சைகளை வழங்கி வருகிறோம். நோயாளிகளின் உடல்நலம், தன்னம்பிக்கை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எங்களின் முக்கிய நோக்கமாகும்," என்றார்.

மதுரை அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நீலிஸ் திவாரி கூறுகையில், "திருமணத்திற்கு முந்தைய பரிசோதனைகள், ஆண் கருவுறுதல் மதிப்பீடு, மேம்பட்ட நுண் அறுவை சிகிச்சைகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகள் மூலம் ஆண்களின் பாலியல் நலப் பராமரிப்பில் புதிய தரத்தை உருவாக்கி வருகிறோம். அதிநவீன தொழில்நுட்பம், பல்துறை நிபுணர்கள் மற்றும் முழுமையான ரகசியத்தன்மையுடன் தென் தமிழகம் முழுவதும் உலகத் தர சேவைகளை வழங்குவதே எங்களின் இலக்காகும்," என்று தெரிவித்தார்.

# சிவகங்கை மாவட்டத்தில், பழங்குடியினர், நரிக்குறவர், தூய்மைப் பணியாளர், புதிரை வண்ணார், இன பொதுமக்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், போன்ற அரசு ஆவணங்கள் இல்லாதவர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு முகாம்

சிவகங்கை, ஜுலை.22-

சிவகங்கை மாவட்டத்தில், பழங்குடியினர், நரிக்குறவர், தூய்மைப் பணியாளர், புதிரை வண்ணார், இன பொதுமக்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், போன்ற அரசு ஆவணங்கள் இல்லாதவர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 25.07.2026 அன்று காலை 9.00 மணிக்கு தேவகோட்டை வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி பகுதியிலும், 01.08.2026 காலை 9.00 மணிக்கு காளையார்கோவில் மற்றும் இளையான்குடி வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், காளையார்கோவில் பகுதியிலும், 08.08.2026 காலை 9.00 மணிக்கு திருப்பத்தூர் மற்றும் சிங்கம்புணரி வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் பகுதியிலும், 16.08.2026 காலை 9.00 மணிக்கு திருப்புவனம் மற்றும் மானாமதுரை வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், திருப்புவனம் பகுதியிலும் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

முன்னதாக, 18.07.2026 சிவகங்கை வட்டம், வட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை பகுதியில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

எனவே, மேற்கண்ட ஆவணங்கள் இல்லாத, பழங்குடியினர், நரிக்குறவர், தூய்மைப் பணியாளர், புதிரை வண்ணார் இன பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாளில் விண்ணப்பித்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் பா.ஆகாஷ், தெரிவித்துள்ளார்.

# மழை வேண்டி பால்குட ஊர்வலம்; முத்துமாரியம்மனுக்கு கூழ் ஊற்றும் விழா விமரிசையாக நடைபெற்றது

கிருஷ்ணகிரி, ஜுலை.22-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட வரட்டம்பட்டி காந்திநகர் கிராமத்தில் உள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில், மழை வேண்டியும், மத நல்லிணக்கம் நிலைத்திருக்கவும், விவசாயம் செழிக்கவும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இதையொட்டி,நேற்று முன்தினம் தென்பெண்ணை ஆற்றில் இருந்து புனித நீர் எடுத்து வந்த பக்தர்கள், பெண்கள் பால்குடம் சுமந்து பக்தி பரவசத்துடன் ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர். தொடர்ந்து, அம்மனுக்கு புனித நீரால்



மற்றும் பாலால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, நேற்று மதியம் அம்மனுக்கு பாரம்பரிய கூழ் ஊற்றும் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெறுகிறது.இதில் வரட்டம்பட்டி காந்திநகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 720 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறைஅலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.முன்னதாக,மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தனித்துணை ஆட்சியர் கவிதா, உதவி ஆணையர் (கலால்) .பஞ்சாபகேசன்மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் தகுதி தேர்வில் விஷயத்தில் தமிழக அரசு ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வர தீர்மானம்

வரதராஜபுரம், ஜுலை.22-

காஞ்சிபுரம் மாவட்டம் வரதராஜபுரத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் சார்பில் மாநில செயற்குழு பொதுக்குழு தாம்பரம் அடுத்த முடிச்சூர் வரதராஜபுரத்தில் நடைபெற்றது,இதில் மாநில மாவட்ட செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.. அப்போது அதன் தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் ஆசிரியர் நலன் கருதி பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

பின்னர் செய்தியாளரிடம் பேசிய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின்






தலைவர் கு.தியாகராஜன் பேசும் போது:

உச்சநீதி மன்றம் தேசிய அளவில் ஆசிரியர் தகுதி தேர்வு நடத்த வேண்டும் என்கிற தீர்பால் ஆசிரியர்களின் பணி பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது,

இதற்கு மாநில அரசு ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் ஆசிரியர் தகுதி தேர்வு அறிவிப்புக்கு முன்னர் சேர்ந்த ஆசிரியர்களுக்கு விலக்கு பெற சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டும், மற்றொருபுறம் உச்சநீதிமன்றத்தையும் நாடி அதற்கான விளக்கத்தை முழுமையாக பெற வேண்டும்,

ஆசிரியர்கள் தங்கள் பணிகளை தக்க வைத்துக் கொள்ள அவர்கள் ஆசிரியர் தகுதி தேர்வில் முழுமையாக கவனம் செலுத்தி விடுமுறை எடுத்து படித்தால் மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படும் சூழல் உள்ளது எனவே தமிழக அரசு பொருப் பேற்று செயல்பட வேண்டும்,

பழைய ஓய்வூதிய திட்டத்தை ஆதரித்த தவெக அதனை முழுமையாக செயல்படுத்த வேண்டும், அதுவரை கடந்த திமுக அரசு செயல்படுத்திய திட்டத்தை அமுலில் வைக்க வேண்டும்,

ஆசிரியர்கள் கலந்தாய்வு நிதிமன்ற தடையில் உள்ள நிலையில் அமைச்சர் மனைவி உள்ளிட்டோர் பணி மாற்றல் என்பது துய்மையான ஆட்சி வழங்குவதாக கூறும் முதலமைச்சரின் செயல்பாட்டிற்கு எதிராக உள்ளது என்றார் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றார், அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்வியில் 7.5 சதவிகிதம் என்கிற இடஒதுக்கீட்டை 10 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்,

அரசு பள்ளிகளில் நிரந்தர தூய்மை பணியாளர்களை நியமனம் செய்து தரவேண்டும் என்றார்.




# NEET 2026ல் மதுரைக்கு பெருமை!

## அகாஷ் கல்வி மைய மாணவர் தேசிய அளவில் AIR 530; பலர் 720க்கு 670க்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று சாதனை

மதுரை, ஜூலை.22-

மருத்துவப் படிப்புக்கான NEET UG 2026 தேர்வில் மதுரையைச் சேர்ந்த ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (AESL) மாணவர் பிரஜித் டி. தேசிய அளவில் 530வது அகில இந்திய தரவரிசை (AIR 530) பெற்று குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளார்.

இந்தாண்டு நடைபெற்ற NEET தேர்வில் AESL மாணவர்கள் பலரும் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று மருத்துவக் கல்வியில் தங்களது திறமையை நிரூபித்துள்ளனர். பிரஜித் டி. 720க்கு 670 மதிப்பெண்கள் பெற்று தேசிய அளவில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளார்.

மேலும், பிரதாப்குமார் கே. (655), ஹர்ஷா வி. (649), மாதேஸ்ராம் ஜி. (620), சந்தோஷ்ராஜ் எஸ். (612), ஹரிஷ் கே. (609), பிரதம் சிங் (606), ஆல்ட்ரிக்வரென்ஸ் ஜி. (605) உள்ளிட்ட மாணவர்களும் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று சாதனை பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

AESL வெளியிட்ட தகவலின்படி, மதுரை மையத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர வழிகாட்டப்பட்டுள்ளனர். இம்மையத்தின் வகுப்பறைப் பயிற்சி, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், தனிப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த கற்றல் முறைகள் மாணவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து AESL தென்னக மண்டல இயக்குநர் டி. சிவா பிரசாத் கூறுகையில், "NEET 2026 தேர்வில் மாணவர்கள் பெற்றுள்ள இந்த வெற்றி எங்களுக்கு பெருமை அளிக்கிறது. மாணவர்களின் கடின உழைப்பு, பெற்றோரின் ஒத்துழைப்பு மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பே இந்த வெற்றிக்கு அடித்தளமாகும். எதிர்காலத்திலும் மேலும் பல மருத்துவர்களை உருவாக்க உறுதுணையாக இருப்போம்," என்றார்.

# ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றுங்கள்! மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் மாநகராட்சி ஆணையாளர் திடீர் ஆய்வு : கடை உரிமையாளர்கள், அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவு



மதுரை, ஜூலை.22-

மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் (இ.ஆ.ப.) செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, காய்கறி கடைகள், சரக்கு வாகனங்கள் வந்து செல்லும் வழித்தடங்கள், சாலைகள், தெருவிளக்குகள் மற்றும் மழைநீர், கழிவுநீர் வடிகால்களின் செயல்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டார்.

கடைகளுக்கு ஒதுக்கப்பட்ட பரப்பளவை மீறி செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் இயங்கும் வகையில் கடை உரிமையாளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், காய்கறி கழிவுகளை ஆங்காங்கே கொட்டாமல், அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கொட்ட வேண்டும் என வலியுறுத்திய ஆணையாளர், கடைகளில் தினந்தோறும் கழிவுகளை அகற்றவும், கழிவுநீர் கால்வாய்களில் தண்ணீர் தேங்காதவாறு தொடர்ந்து கண்காணிக்கவும், தெருவிளக்குகள் மற்றும் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீரமைக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து வண்டியூர் பூங்காவில் நடைபயிற்சி, உடற்பயிற்சி, குழந்தைகள் விளையாட்டு பகுதி மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளையும் ஆய்வு செய்த அவர், பூங்காவை தூய்மையாக பராமரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், மண்டலம் 1 பொறியாளர் நகரில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.72 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சாலைப் பணிகளையும் பார்வையிட்டு, அதன் தரத்தை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி உதவி ஆணையாளர் தமிழரசன், உதவி செயற்பொறியாளர்கள், நகர்நல அலுவலர், சுகாதார அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.




# மதுரையில் 'PRINT N PACK 2026' கண்காட்சி: அச்சு மற்றும் பேக்கேஜிங் துறையின் அதிநவீன தொழில்நுட்பங்கள் ஒரே இடத்தில்!

மதுரை, ஜூலை.22-

மதுரை மாவட்ட சிறு, குறு தொழில்கள் சங்கம் (MADITSSIA) சார்பில், தமிழ்நாட்டின் மிகப்பெரிய அச்சு மற்றும் பேக்கேஜிங் தொழில்துறை கண்காட்சிகளில் ஒன்றான 'PRINT N PACK 2026' கண்காட்சி வருகிற ஜூலை 24, 25 மற்றும் 26 ஆகிய மூன்று நாட்கள் மதுரை ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறுகிறது.

இந்த கண்காட்சியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 180க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று, அச்சு, பேக்கேஜிங், லேபிளிங், டிஜிட்டல் பிரிண்டிங், கிராவியர், ஃப்ளெக்ஸோகிராபிக், ஆட்டோமேஷன், தரக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங், தொழில்துறை மென்பொருள், அச்சு மைகள், ரப்பர் ரோலர்கள், உதிரி பாகங்கள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்துகின்றன.

MSME தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வங்கி சேவைகள், அரசின் தொழில் மேம்பாட்டு திட்டங்கள், தொழில் விரிவாக்கம், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL), SIDCO, SIDBI, TIIC உள்ளிட்ட பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் பங்கேற்கின்றன.

கண்காட்சியை தமிழ்நாடு தொழில்துறைத் துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் (TNPL) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஜெயந்த், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கிரிஷ்ணன், ஐ.ஏ.எஸ். உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

கண்காட்சி காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறும். வணிகப் பார்வையாளர்களுக்கு ஜூலை 24ஆம் தேதி மதியம் 1 மணி முதல் 3 மணி வரை சிறப்பு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அச்சு இயந்திரங்களின் நேரடி செயல்விளக்கங்களும் (Live Demonstration) இடம்பெறுகின்றன.

அச்சு மற்றும் பேக்கேஜிங் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோர், உற்பத்தியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்று பயன்பெறுமாறு MADITSSIA தலைவர் வி. செந்தில்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.





# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஜூலை.22-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 151 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும்

நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், நீலகிரி மாவட்டம் முள்ளிக்கூர் கிராமம் கொடமரம் பகுதியை சேர்ந்த தீபா என்பவர் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பம் அளித்ததன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, மருத்துவ காப்பீடு அட்டையினை வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர், மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ஐ முன்னிட்டு, எமரால்டு ஹைட்ஸ் கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, உதகை வருவாய் கோட்டாட்சியர் டினுஅரவிந்த், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி ஆணையர் (கலால்) மாதேஸ்வரன் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மதுரை உத்தங்குடி தனியார் மருத்துவமனையில் பாதுகாப்பின்றி பணிகள்? நடவடிக்கை எடுக்க கோரிக்கை

மதுரை, ஜூலை.22-

மதுரை ஒத்தக்கடை செல்லும் வழியில் உள்ள உத்தங்குடி பகுதியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் ஈடுபட்டுள்ள சில தொழிலாளர்கள் பாதுகாப்பு காலணி, பாதுகாப்பு பெல்ட் உள்ளிட்ட உரிய பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி ஆபத்தான முறையில் பணிபுரிவதாக புகார் எழுந்துள்ளது.

தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்து, அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# இளம் பேரிடர் நண்பன் தன்னார்வலர்களுக்கான (யுவ ஆப்தமித்ரா உறைவிடப் பயிற்சி) ஒரு வார கால பயிற்சிக்கான துவக்க விழா

ஆண்டிபட்டி, ஜூலை.22-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், திம்மரநாயக்கனூரில் உள்ள பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் இளம் பேரிடர் நண்பன் தன்னார்வலர்களுக்கான (யுவ ஆப்தமித்ரா உறைவிடப் பயிற்சி) ஒரு வார கால பயிற்சிக்கான துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையேற்று பயிற்சி வகுப்பை துவக்கி வைத்து பேசுகையில், மாவட்டத்தில் பேரிடர் காலங்களில் மக்களுக்குத் தேவையான உதவியை செய்திடும் வகையில் இதுபோன்ற பயிற்சிகள் தன்னார்வலர்களுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாவட்டத்தில்






பேரிடர் சூழ்நிலை வரும் காலங்களில் முதல்கட்டமாக இந்த இளம் தன்னார்வலர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதே இதன் முக்கியத்துவமாகும். இப்பயிற்சியில் பங்கேற்றுள்ள கல்லூரி மாணவ மாணவிகள் முழு மன நிறைவுடன் பணியாற்ற வேண்டும் என்ற ஈடுபாட்டுடன் செயல்பட்டால் மட்டும்தான் நாம் நினைத்த வெற்றியை பெற முடியும்.பேரிடர் காலங்களில் தன்னார்வலர்களாகிய உங்கள் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாக இருக்கும். அந்த வகையில் பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் பெண்கள் கல்லூரியில் பயிலும் 84 மாணவிகள், உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் பயிலும் 21 மாணவிகள், 27 மாணவர்கள், பெரியகுளம் மேரிமாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 7 மாணவிகள், 15 மாணவர்கள், ஆண்டிபட்டி பாரத் நிகேதன் பொறியியல்கல்லூரியில்பயிலும் 3 மாணவிகள் 30 மாணவர்கள், கோட்டூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 10 மாணவர்கள் மற்றும் தேனி நேரு யுவகேந்திரா கல்லூரியில் பயிலும் 70 மாணவிகள், 34 மாணவர்கள் என மொத்தம் 301 மாணவ மாணவிகள் ஆப்தமித்ரா பயிற்சி பெற பங்கேற்றதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.இந்தப்பயிற்சி வகுப்பில் தீயணைப்புத் துறைசுகாதாரத்துறை மற்றும் என்.சி.சி., என்.எஸ்.எஸ். அமைப்புகள் மூலம் பேரிடர் காலத்தில் எவ்வாறு அணுகுவது மற்றும் பேரிடர் காலத்தில் கோல்டன் ஹவர் என்று சொல்லக்கூடிய அந்த குறிப்பிட்ட நேரத்தில் முதலில் யார்யாருக்கு தகவல் தெரிவித்து மீட்புப் பணிகளை கையாளுவது என்பதை நன்கு கற்றுக்கொண்டு நீங்கள் பேரிடர் காலத்தில் எந்த பாதிப்புமின்றி எல்லோரையும் மீட்டெடுத்தேன் என்ற நிலையை உருவாக்கவும், பிறருக்கு உதவிக்கரம் நீட்டி சிறந்த வெற்றி வீரராக திகழ்ந்திட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரி வித்தார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .இராமகிருஷ்ணன், வட்டாட்சியர்கள் செந்தில்குமார் (ஆண்டிபட்டி) செந்தில் (பேரிடர் மேலாண்மை), பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் அருள்குமார், பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் பெண்கள் கல்லூரி தேசிய மாணவர்படை (NCC) அலுவலர் மரு.மெர்லின் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161